**Starting time 11.28 A.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 31/2017**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 14.12.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u> நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் ஏற்கனவே பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சொல்லியுள்ளேன். நான் நில தரகர் என்பதால் தாவா சொத்து பற்றி விவரம் எனக்கு தெரியும் என்றால், ஆமாம். தாவா சொத்தின் புல எண். என்னவென்றால், 359/4A. மேற்படி விவரங்களை என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சொல்லியுள்ளேன்.

2. என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால், கலியபெருமாள் இடத்தை அபகரிப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சொத்து எந்த ஊர் எல்லையில் இருக்கிறது என்றால், கீரிப்பட்டி எல்லையில் இருக்கிறது. சிக்கு கவுண்டர், கோழி பெரியண்ண கவுண்டர், மூக்கைய கவுண்டர் ஆகியோர் என்னுடைய உறவினர்களா என்றால், இல்லை. நான் தாவா சொத்திற்கு அருகில் வசிக்கிறேனா என்றால், இல்லை. நான் நாகியம்பட்டி ஊருக்குள் தான் குடியிருக்கிறேன் என்றால், ஆமாம்.

3. எனக்கு அந்த ஊரில் நிலமிருக்கிறதா என்றால், இல்லை. எனக்கும் வேறு யாருக்கேனும் பிரச்சனை ஏற்பட்டு குற்றவியல் வழக்கு நிலுவையில் இருக்கிறதா என்றால், இல்லை. நில தரகர்

தொழில் சம்மந்தமாக நான் மற்றவர்களிடம் பிரச்சனை செய்து அதனால் என்மேல் வழக்கு உள்ளது என்றால், இல்லை. கிழங்கு வியாபாரம் சம்மந்தமாக எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் பழக்க வழக்கம் உள்ளது என்றால், ஆமாம். எனக்கும் அவருக்கும் வியாபாரம் சம்மந்தமாக மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால், இல்லை. நான் 1-ஆம் பிரதிவாதியின் தோட்டத்தில் விளைந்த கிழங்கை எடுத்துக் கொண்டு பணம் தர மறுத்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும், அந்த முன் விரோதத்தின் காரணமாக தற்போது அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

4. வாதிதான் தாவா சொத்தில் 55 வருடங்களுக்கு மேலாக சுவாதீனத்தில் இருக்கிறார் என்று உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும் வாதி எக்காலத்திலும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால், சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.36 A.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.